



Pravasi Bharatiya Divas



We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## MARCH - 2019

*We Are Here..!! To Guide You..!!*

TAMIL NADU
GLOBAL INVESTORS MEET 20
INVESTORS' PARADISE








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 02.03.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- பொருளாதார நிகழ்வுகள்











## தமிழக நிகழ்வுகள்

- முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடந்த **2வது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3 லட்சத்து 431 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டது.
  - இதில் கலந்து கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு, அரசு சார்பில் வழிகாட்டுதல் கூட்டம் சென்னை கிண்டியில் நடந்தது.
  - ஒப்பந்தம் மேற்கொண்டவர்களில் **366 தொழில் நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கி** உள்ளன.

## இந்திய நிகழ்வுகள்

- **வெயிலில் பணிபுரியும் கட்டிட தொழிலாளர்கள்,** உள்பட பல்வேறு பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு வெயிலினால் ஏற்படும் மயக்கம் மற்றும் தொல்லைகளில் இருந்து தப்பிக்க **மதியம் 12 மணி முதல் 3 மணி வரை கட்டாய இடைவேளை** அளிக்க **கேரள** அரசின் **மாநில தொழிலாளர் துறை ஆணையம்** உத்தரவிட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- பின்லேடனின் மகன் **ஹம்சா பின்லேடனை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கருப்புப் பட்டியலில்** சேர்த்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சாபஹாரில் (ஈரான்) நடைபெற்ற **மக்ரான் கோப்பைக்கான** குத்துச்சண்டை போட்டியின் இறுதிச் சுற்றில் **49 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் தீபக் சிங் தங்கப் பதக்கம்** வென்றுள்ளார்.

- பஞ்சாப் அணிக்கு எதிரான **47வது தேசிய சீனியர் ஆண்கள் ஹேண்ட்பால் சாம்பியன்ஷிப் போட்டியில் இராணுவ அணி வெற்றி** பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.

- ஜப்பானைச் சேர்ந்த பிரபல டென்னிஸ் வீராங்கனை **நவோமி ஓசாகா-வின் பயிற்சியாளராக ஜெர்மைன் ஜென்கின்ஸ்** நியமிக்கப்பட்டுள்ளார்.
    - நவோமி ஓசாகா கடந்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெற்ற அமெரிக்க ஓபன் மற்றும் இந்தாண்டு ஜனவரியில் நடைபெற்ற ஆஸ்திரேலிய ஓபன் ஆகியவற்றை கைப்பற்றி முதன் முறையாக டென்னிஸ் தரவரிசையில் நம்பர் ஒன் இடத்தை பிடித்து சாதனைப் படைத்துள்ளார்.

## பொருளாதார நிகழ்வுகள்

- 2019 மற்றும் **2020ம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 7.3 சதவீத அளவுக்கு இருக்கும்** என தரச்சான்று நிறுவனமான **மூடிஸ் தெரிவித்துள்ளது.**

- 2019ம் ஆண்டு, பிப்ரவரி மாத **ஜி.எஸ்.டி வரிவிதிப்பு மூலம் 97 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக வசூலாகியிருப்பதாக** மத்திய நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- கடந்த **2018ம் ஆண்டில் சீர்திருத்த நடவடிக்கைகள்** அமல்படுத்தப்பட்ட பொதுத்துறை வங்கிகளில் **பஞ்சாப் நேஷனல் வங்கி முதலிடத்தில்** உள்ளது.
    - இதற்காக, அந்த வங்கி 100 மதிப்பெண்களில் 78.4 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது.
    - இதனைத் தொடர்ந்து, பேங்க் ஆ∴ப் பரோடா (77.8), எஸ்பிஐ (74.6), ஓரியண்டல் பேங்க் ஆ∴ப் காமர்ஸ் (69), கனரா வங்கி (67.5), சிண்டிகேட் வங்கி (67.1) ஆகியவை அடுத்தடுத்த


We Shine Academy™

இடங்களில் உள்ளன.

We Shine Academy ™